# டவர் மண்டப திரையரங்கு மன்றம் - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள்/ பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒன்பது இயந்திரங்கள், பொறித்தொகுதி, உபகரணங்களினது கிரயக் கூட்டுத்தொகை மற்றும் போக்குவரத்தில் ஈடுபட்டவாறுள்ள 6 வாகனங்களது மொத்தக் கிரயம் முறையே ரூபா 146,882,915 மற்றும் ரூபா 12,103,015 என்பனவாகும். ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு அவற்றின் தற்போதைய மொத்த தேறிய பெறுமதி முறையே ரூபா 19,879,124 மற்றும் ரூபா 2,114,675 எனக் குறைவடைந்திருந்தன. அச் சொத்துக்களது நியாயமான பெறுமதி தென்படும் விதத்தில் அவற்றை மீள மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் சேர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ‘‘கலாபுர’’ மற்றும் ‘‘டீ.கே.ஒலிக்கூடம்’’ என்பவற்றின் கிரயம் முறையே ரூபா 15,135 மற்றும் ரூபா 104,044 என்பனவாகும். இச் சொத்துக்கள் 2005, 2011 ஆம் ஆண்டுகளில் மன்றத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தபோதும், அச் சொத்துக்கள் பூச்சியப் பெறுமதியில் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

### 1.2.2 பெற வேண்டிய கணக்குகள்

ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த 4 நிலுவையாக உள்ள கடன்பட்டோர் மீதிகளின்கூட்டுத்தொகை ரூபா 120,620 ஆகும். மீளாய்வாண்டு முடிவிலும் அவற்றை அறவிட முடியாதிருந்தது.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே காணப்படும் கணக்கீட்டு விடயங்கள் சம்பந்தமாக அவற்றிக்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் இன்மையால் கணக்காய்வில் அவற்றைத் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடிவில்லை.

| கணக்கீட்டு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| அலுவலக உபகரணம், கணனிகள் இயந்திரங்களும் பொறித்தொகுதியும், சங்கீத உபகரணங்கள் | 137,951,196 | நிலையான சொத்துப்பதிவேடு, பிரதான பட்டோலைப் பொருள் பதிவேடு மற்றும் பொருட்கணிப்பு அறிக்கை |

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள், போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச் சட்டத்தின் II ஆம் பிரிவு மற்றும் 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பந்தி | அரச முயற்சிகளது மிகையை முதலீடு செய்கையில் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமாயினும், 2012 ஆம் ஆண்டின் ரூபா 3 மில்லியன் நிலையான வைப்பு முதலீட்டுக்குத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணங்கள் 756,757 மற்றும் 2003 ஜுன் | ஒவ்வொரு ஆண்டும் திசெம்பர் 15 அல்லது அதற்கு அண்மித்ததாக பொருட் கணிப்புச் சபை |

| | | |
|---|---|---|
| | 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.5 ஆம் பந்தி | அமைக்கப்பட்டு பொருட்கள் சரி, பிழை பார்க்கப்பட வேண்டுமாயினும், 2012 ஆம் ஆண்டிற்கான பொருகணிப்பு 2013 ஜூன் மாதத்திலும் நடைபெற்றிருக்கவில்லை. |
| (இ) | நிதிப்பிரமாணங்கள் 454(1) மற்றும் 751(1) | எல்பின்ஸ்டன் கலையரங்கு நவீனமயப்படுத்தப்படும்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 9,641,290 பெறுமதியான இயந்திரங்களும் உபகரணங்களும் பிரதான பொருட்பட்டோலைப் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டு அப் பதிவேட்டின் மூலம் ஒவ்வொரு பிரிவுக்கும் பட்டோலைப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) | 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.5(ஏ) பந்தி மற்றும் 2006 ஒக்டோபர் 09 ஆந் திகதிய பீஈடீ/39 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | மன்றத்தால் உதவிப் பணிப்பாளருக்கும் (நாடக மேம்பாட்டு கலைஞர்களது நலனோம்பல் மற்றும் நிகழ்ச்சித் திட்டம்) 2012 செப்டெம்பர் வரை சிரேட்ட முகாமையாளருக்கும் (கலையரங்கு) மன்றத்தின் வாகனங்களை வழங்கி மாதாந்த எரிபொருள் படியாக ரூபா 17,880 வீதப்படி 2012 ஆம் ஆண்டில் முறையே ரூபா 211,680 மற்றும் ரூபா 158,040 எனத் திறைசேரியின் அங்கீகாரத்தைப்பெறாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (உ) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை வழிகாட்டல்கள் 8.9.1 மற்றும் 8.9.3 என்பன | மதிப்பிடப்பட்ட ரூபா 289 மில்லியனுடன் எல்பின் கலையரங்கை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத் உசாத்துணைச் சேவையை வழங்குவது தேசிய க திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டது. செ உதவியை வழங்குவதன் மூலம் நிர்மாண வேலை சிவில் பாதுகாப்பு நடவடிக்கைத் திணைக் மேற்கொண்டுள்ளது. 2012 மே 31 ஆந் திகதியன்று நிர் வேலை ஆரம்பமாகிய போதும், டவர் மண்டப திரைய மன்றம் 2013 ஏப்ரலிலும் இந் நபர்களுடன் எ புரிந்துணர்வு உடன்படிக்கையிலும்ஈடுபட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் நிதி விளைவுகள் ரூபா 11,411,238 பற்றாக்குறையாகியது. இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 11,657,128 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 245,890 முன்னேற்றம் ஏற்படுவதற்கு மன்றத்தின் செயற்பாட்டுச் செலவினத்திற்கு ஒப்பாக செயற்பாட்டு வருமானம் அதிகரித்திருந்தமை காரணமாயிற்று.

### 2.2 பகுப்பாய்வுடன் கூடிய மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது வங்கி வைப்பு வட்டி மற்றும் வாடகைக் கட்டண வருமானம் ரூபா 3,933,631 அல்லது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19.67 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதும், மன்றத்தின் பிரதான செயற்பாட்டு வருமானமான அரங்கின் வாடகை வருமானம் ரூபா 3,434,935 அல்லது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 33 சதவீதத்தால் குறைத்திருந்தது. அவ்வாறே, தாபன மற்றும் நிர்வாகச் செலவினம் ரூபா 4,268,940 ஆல் அல்லது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7.88 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மன்ற வாடகை வருமானம் கூடிய சதவீதத்தால் குறைவுற்றபோதும், வருமானத்திற்கு ஒப்பாக செலவினம் குறைவடைந்தமை காரணமாக பற்றாக்குறையில் சிறிதளவு குறைவு ஏற்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திறன்

செயல் திட்டத்தின் பிரகாரம், எல்பின்ஸ்டன் திரையரங்கு மன்ற நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் 2012 முதல் மூன்று காலத்துள் ஆரம்பமாகி 2012 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 80 மில்லியனுக்கான வேலையை முடிவு செய்யத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், 2012 ஆம் ஆண்டு இறுதியில் இந் நடவடிக்கைகளது நிதிமுன்னேற்றம் ரூபா 14.99 மில்லியன் மாத்திரமே ஆகியது. பௌதீக செயற்திறனும் அத்தருணத்தில் அளவிடக் கூடிய நிலையில் போதியளவு நடைபெறாதிருந்தது.

## 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

2009 ஆம் ஆண்டு டவர் மண்டப திரையரங்கு நவீனமயப்படுத்தலின் பின்னர் அங்கு புதிதாக 735 ஆசனங்களைப் பொருத்துவதற்கு ரூபா 9,195,975 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நிறுவனத்தின் அதிகூடிய உயரம் 850 மில்லிமீட்டர் எனத் தொழில் நுட்ப மதிப்பாய்வுக் குழு வழங்கிய அளவீடு பொருத்தமற்றது என அவதானிக்கப்பட்டதன் பின்னர்,1000 மி.மீற்றர் ஆக மாற்றப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட காரணங்களினால் பின்னால் உள்ள ஆசனங்களில் அமரும் பார்வையாளருக்குச் சரிவர மேடை தோற்றமளிக்காதுபோகும் சிக்கல் உருவானது. டவர் மண்டப திரையரங்கு நவீனமயப்படுத்தப்பட்டு 2 ஆண்டுகளுக்கு மேலாகி விட்ட நிலையிலும் 2012 திசெம்பர் 31 அன்றும் இது தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

குறைபாடுகளுடன் பொருத்தப்பட்ட ஆசனங்களைக் கழற்றி பின்னால் உள்ள ஆசனங்களில் அமர்பவர்களுக்கு மேடை தோற்றமளிக்கும் விதத்தில் மீண்டும் தயார்படுத்தப்படுதலிற்கான கிரயத்தைச் செலவிட நேர்ந்தமையும் அக் காலப்பகுதியின் போது கலையரங்கு மூடப்பட்டதால் வருமானம் அற்றுப் போகும் ஆபத்தை எதிர்நோக்க வேண்டியுமிருந்தது.

## 4. கணக்களிதன்மையும்நல ் லாளுகையும்

## 4.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

(அ) 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்தியின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 28 க்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், நிதிசார் கூற்றுக்கள் கணக்காய்விற்குச் 5 மாதகால தாமதத்தின் பின்னர் 2013 ஜூலை 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

(ஆ) 2013 ஏப்ரல் 08 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வரைவு நிதிசார் கூற்றுக்களது கணக்காய்வின்போது புலனாகிய ரூபா 18,315,952 க்கான கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் ரூபா 13,594,425 க்கான விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து இறுதி நிதிக்கூற்றுக்களில் அவை திருத்தஞ் செய்யப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(இ) பேரேட்டில் உள்ள ஒவ்வொரு கணக்கும் இனங்காணப்படுவதன் பொருட்டு குறியீட்டு இலக்க முறையைப் பயன்படுத்தப்படாததுடன் பேரேட்டில் உள்ள

கணக்குகள் வகைப்படுத்தப்பட்டு, சுருக்கத்திற்குள்ளாகி அதன் பின்னர் பரீட்சை மீதி தயாரிக்கப்ட்டிருந்தது. ஒரே மாதிரியான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நிறுவனம் மற்றும் ஆண்டு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பல கணக்குகள் பேணப்பட்டிருந்தன.

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் மன்றத்தின் தொலை நோக்கை நிறைவேற்றுவதற்காக அதன் நோக்கங்களையும் இலக்கையும் எய்தக்கூடியவாறு 3 ஆண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதிக்கான கூட்டிணைந்த நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 செயற்பாட்டுத் திட்டம்**

மேலே 5.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு மன்றம் கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரிக்காது வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்திருந்தது.

**4.4 வரவு, செலவுத் திட்டக்கட்டுப்பாடு**

2012 ஆம் ஆண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட திருத்தஞ் செய்யப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சில வருமான, செலவின இலக்குகள் உள்ளபடியாக எய்தப்படுகையில் 21 முதல் 8100 வரையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதால் வரவு, செலவுத்திட்டம் ஆக்கபூர்வமான நிதிக்கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**4.5 வருடாந்த அறிக்கையைப் பாராளுமன்றத்தில் முன்வைத்தல்**

2011 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை 2013 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் மன்றம் பாராளுமன்றத்தில் முன்வைத்திருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறைகளின் நலிவுகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பதவியணியினர் நடவடிக்கைகள்

(இ) வாகனக் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக் கட்டுப்பாடு

(உ) கொள்வனவு நடவடிக்கைகள்